MAY 2023 **U/ID 22218/UCZ2A/UCW2A/ UCY2A/UCV2A**

Time : Three hours Maximum : 75 marks

SECTION A — ($10 \times 2 = 20$ marks)

Answer any TEN questions.

1. What are the types of branches?

   கிளை கணக்கின் வகைகள் யாவை?

2. Mention any two features of dependent branch?

   சார்பு கிளை கணக்கின் ஏதேனும் இரண்டு தன்மைகளை தருக.

3. What do you understand by stock and debtors system?

   சரக்கிருப்பு மற்றும் கடனாளிகள் முறை பற்றி நீவீர் அறிவது யாது?

4. What is department? Explain with example.

   துறை என்றால் என்ன? உதாரணத்துடன் விளக்குக.

5. What are the needs of departmental accounts?

   துறைவாரிக் கணக்குகளின் தேவைகள் யாவை?

6. Write short note on cash price and down payment.

   குறிப்பு வரைக : ரொக்க விலை மற்றும் முன்பணம்.

7. What is 'Repossessed stock'?

   'மீண்டும் கைப்பற்றப்பட்ட சரக்கு' என்றால் என்ன?

8. What is revaluation account?

   மறுமதிப்பீட்டுக் கணக்கு என்றால் என்ன?

9. How do you treat goodwill when a partner retires?

   கூட்டாளி விலகும் போது நற்பெயர் எவ்வாறு கணக்கிடப்படுகிறது?

10. What is dissolution of firm?

    நிறும கலைப்பு என்றால் என்ன?

11. What is piecemeal distribution?

படிபடியாக பகிர்ந்தலித்தல் என்றால் என்ன?

12. What is meant by maximum loss?

உச்ச நட்டம் என்றால் என்ன?

SECTION B — ($5 \times 5 = 25$ marks)

Answer any FIVE questions.

13. Sun Ltd., opened a branch on 1.1.2021 at Calcutta. The following information is supplied to you. Prepare Branch A/c.

	Rs.
Goods Sent to Branch	50,000
Sales: Cash Rs. 20,000 and Credit Rs. 36,000	56,000
Cash received from Debtors	32,000
Discount allowed to them	600
Cash sent to branch for expenses	7,000
Stock on 31.12.2021	8,000
Debtors on 31.12.2021	3,400

சன் நிறுவனம் 1.1.2021 அன்று கல்கத்தாவில் புதிதாக ஒரு கிளையை ஆரம்பித்தது. அதன் விவரங்கள் பின்வருமாறு : கிளை கணக்கு தயார் செய்க.

	ரூ.
கிளைக்கு அனுப்பிய சரக்கு	50,000
விற்பனை: ரொக்கம் ரூ. 20,000 மற்றும் கடன் ரூ. 36,000	56,000
கடனாளிகளிடம் பெற்ற ரொக்கம்	32,000
தள்ளுபடி பெற்றது	600
கிளை செலவுக்கு ரொக்கம் அனுப்பியது	7,000
31.12.2021 ல் சரக்கிருப்பு	8,000
31.12.2021 ல் கிளை கடனாளிகள்	3,400

14. From the following details, prepare departmental trading accounts.

	Department A Rs.	Department B Rs.
Opening stock	9,000	8,400
Total purchases	27,000	21,600
Total sales	42,000	36,000
Closing stock	10,800	4,800
Credit purchases	17,000	10,600
Credit sales	5,000	6,000

கீழ்கண்ட விவரங்களை கொண்டு துறைவாரி வியாபாரக் கணக்கை தயார் செய்க.

	துறை A ரூ.	துறை B ரூ.
ஆரம்ப சரக்கிருப்பு	9,000	8,400
மொத்த கொள்முதல்	27,000	21,600
மொத்த விற்பனை	42,000	36,000
இறுதி சரக்கிருப்பு	10,800	4,800
கடன் கொள்முதல்	17,000	10,600
கடன் விற்பனை	5,000	6,000

15. 'R' purchased a machine on 1.1.2018 on H.P. system. The cash price of the machine is Rs. 22,350, payable Rs. 6,000 on signing the agreement and the balance in three equal annual installments of Rs. 6,000 at the end of each year. Vendor charges interest at 5% p.a. You are required to calculate the interest included in each installment.

1.1.2018 - ல் 'R' என்பவர் வாடகைக் கொள்முதல் முறையில் ஒரு இயந்திரம் வாங்கினார். இயந்திரத்தின் ரொக்க விலை ரூ. 22,350, ஒப்பந்தத்தின் கையெழுத்திடும் போது ரூ.6,000 ம் ஆண்டு இறுதியிலும் ரூ.6,000ம் என மூன்று ஆண்டுகளுக்கும் தரப்படவேண்டும். வாடகை விற்பனையாளர் ஆண்டுக்கு 5 சதவீதம் வட்டி வசூலிக்கிறார். ஒவ்வொரு தவணையிலும் வட்டியும் சேர்ந்துள்ளது. வட்டியைக் கணக்கிடுக.

16. Calculate the amount of goodwill at three years' purchase of last five years average profits. The profits were:

I year – Rs. 9,600 II year – Rs. 14,400

III year – Rs. 20,000 IV year – Rs. 6,000

V year – Rs. 10,000.

கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு நன்மதிப்பை கணக்கிடுக. ஐந்து ஆண்டுகளின் சராசரி இலாபத்தில் மூன்று ஆண்டு கொள்முதல் என்ற முறையில் கணக்கிடுக. கடந்த ஐந்து ஆண்டுகளின் இலாபம் முறையே.

முதல் ஆண்டு - ரூ.9,600 இரண்டாம் ஆண்டு - ரூ. 14,400

மூன்றாம் ஆண்டு - ரூ.20,000 நான்காம் ஆண்டு - ரூ.6,000

ஐந்தாம் ஆண்டு - ரூ.10,000

17. X and Y share their profits and losses in the ratio of 5:3. On 1.4.2021 Z was admitted and the following revaluation were made;

(a) Increase the value of building by Rs. 10,000

(b) Provision for doubtful debts on debtor Rs. 2,000.

Prepare revaluation a/c.

X மற்றும் Y இருவரும் 5:3 என்ற விகிதத்தில் லாப நட்டங்களை பிரித்துக் கொள்கின்றனர். Z என்பவர் 1.4.2021 ல் புதிய கூட்டாளியாக சேர்கின்றனர். கீழ்க்கண்ட மறுமதிப்பீடுகள் செய்யப்பட்டது.

(அ) கட்டிடம் மதிப்பு ரூ.10,000 உயர்ந்தது.

(ஆ) கடனாளிகள் மீது வராக்கடன் காப்பு ரூ.2,000.

மறு மதிப்பீட்டு கணக்கை தயாரிக்கவும்.

18. The balance sheet of X, Y and Z who were sharing profits in the ratio of 3:1:1 stood as follows on 31.12.2021 (i.e) the date of dissolution.

Liabilities	Rs.	Assets	Rs.
Sundry Creditors	1,05,000	Cash	1,000
X's Capital	15,000	Bills receivable	4,000
Y's Capital	10,000	Debtors	25,000
		Stock	40,000

Liabilities	Rs.	Assets	Rs.
		Plant	30,000
		Goodwill	10,000
		Z's capital	20,000
	1,30,000		1,30,000

Assets realized Rs. 79,750; Realization expenses are Rs. 2,000. Prepare Realization account.

31.12.2021 அன்று முடிவுடையும் X, Y மற்றும் Z-ன் இருப்பு நிலைக் குறிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது. 3:1:1 விகிதில் இலாப/நட்டம் பகிர்ந்து கொண்டனர்.

பொறுப்புகள்	ரூ.	சொத்துக்கள்	ரூ.
பற்பல கடனீந்தோர்	1,05,000	ரொக்கம்	1,000
X–ன் முதல்	15,000	பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு	4,000
Y–ன் முதல்	10,000	கடனாளிகள்	25,000
		சரக்கிருப்பு	40,000
		இயந்திரம்	30,000
		நற்பெயர்	10,000
		Z–ன் முதல்	20,000
	1,30,000		1,30,000

மேற்கண்ட தேதியில் நிறுவனம் கலைக்கப்பட்டது. சொத்துக்களின் தீர்வு ரூ.79,750 தீர்வு செலவுகள் ரூ.2,000 தீர்வுகணக்குகளைத் தயார் செய்க.

19. From the following distribute cash under proportionate capital method:

Capital of partners

A : Rs. 20,000

B : Rs. 10,000

Profit sharing ratio 3:2

I Instalment Rs. 5,000

II Instalment Rs. 2,000

III Instalment Rs. 1,000

பின்வரும் விபரங்களிலிருந்து ரொக்கத்தைப் படிப்படியாக வழங்குவதற்கான ஒரு அறிக்கையைத் தயார் செய்யவும்.

கூட்டாளிகளின் முதல்

A : ரூ. 20,000

B : ரூ. 10,000

இலாபப் பகிர்வு விகிதம் : 3:2

I தவணை ரூ. 5,000

II தவணை ரூ. 2,000

III தவணை ரூ. 1,000

SECTION C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions.

20. From the following information relates to Madurai Branch, you are required to prepare Branch Account.

	Rs.	Rs.
Stock in trade at the branch 1.1.2020		11,200
Goods sent to Madras branch		1,00,000
Cash sent to branch for the following:		
Salaries	8,600	
Rent	7,200	
Other expenses	2,200	18,000
Cash sent by the branch		1,72,600
Stock in trade at branch on 31.12.2020		7,600
Cash in hand at the branch on 31.12.2020		100

கீழ்கண்ட விவரங்கள் மதுரை கிளை தொடர்பானவை, நீவீர் கிளைக் கணக்கினை தயாரிக்க.

	ரூ.	ரூ.
2020 ஜனவரி 1 ல் சரக்கிருப்பு		11,200
கிளைக்கு அனுப்பிய சரக்கு		1,00,000
கிளைக்கு அனுப்பிய ரொக்கம்:		
சம்பளம்	8,600	
வாடகை	7,200	
பிற செலவினங்கள்	2,200	18,000
தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிய ரொக்கம்		1,72,600
31.12.2020 -ல் கிளையின் சரக்கிருப்பு		7,600
31.12.2020 -ல் கிளையின் கையிருப்பு ரொக்கம்		100

21. The following purchases were made by a business house having three departments.

Dept. A - 1,000 units
Dept. B - 2,000 units
Dept. C - 2,400 units
} = at a total cost of Rs. 1,00,000

Stocks on 1st January were:

Dept. A - 120 units

Dept. B - 80 units

Dept. C - 152 units

Sales were:

Dept. A - 1,020 units at Rs. 20 each

Dept. B - 1,920 units at Rs. 22.50 each

Dept. C - 2,496 units at Rs. 25 each

The rate of gross profit is same in each case. Prepare departmental trading account.

ஒரு வியாபார நிறுவனம் மூன்று துறைகளைக் கொண்டது. பின்வரும் கொள்முதல்களை மேற்கொண்டது.

துறை A - 1,000 அலகுகள்
துறை B - 2,000 அலகுகள்
துறை C - 2,400 அலகுகள்
} = மொத்த விலை ரூ. 1,00,000

ஜனவரி 1-ல் இருப்பு பின்வருமாறு:

துறை A - 120 அலகுகள்

துறை B - 80 அலகுகள்

துறை C - 152 அலகுகள்

விற்பனை பின்வருமாறு:

துறை A - 1,020 அலகுகள் ரூ. 20 வீதம்

துறை B - 1,920 அலகுகள் ரூ. 22.50 வீதம்

துறை C - 2,496 அலகுகள் ரூ. 25 வீதம்

மொத்த இலாப விகிதம் நிலையானது. துறை வியாபார கணக்கை தயார் செய்க.

22. Distinguish between Hire purchase and Installment purchase system.

வாடகை கொள்முதல் முறைக்கும் தவணை கொள்முதல் முறைக்கும் உள்ள வேறுபாடுகளை கூறுக.

23. A and B are partners sharing profit and losses in the ratio 3:1. Their balance sheet on 31.12.2021 was as follows:

Liabilities		Rs.	Assets	Rs.
Creditors		37,500	Cash	22,500
General Reserve		4,000	Bills receivable	3,000
Capital	A	30,000	Debtors	16,000
	B	16,000	Stock	20,000
			Furniture	1,000
			Building	25,000
		87,500		87,500

On 1.1.2022, C is admitted on the following terms.

(a) 'C' pays Rs. 10,000 as his capital for 1/5 share of profits

(b) Goodwill account be raised for Rs. 20,000

(c) Stock and furniture to be reduced by 10% and create 5% for doubtful debts.

(d) Value of building to be appreciated by 20%

(e) Capital accounts are to be adjusted as per new ratio and open current A/C for this purpose.

Show the ledger accounts of firm.

3:1 எனும் விகிதத்தில் இலாப நட்டத்தை பகிர்ந்து கொண்டனர் A மற்றும் B எனும் இரு கூட்டாளிகளின் 31.12.2021 அன்று இருப்பு நிலைக் குறிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

பொறுப்புகள்		ரூ.	சொத்துக்கள்	ரூ.
கடனீந்தோர்கள்		37,500	ரொக்கம்	22,500
காப்பு நிதி		4,000	பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு	3,000
முதல்	A	30,000	கடானாளிகள்	16,000
	B	16,000	சரக்கிருப்பு	20,000
			அறைகலன்	1,000
			கட்டிடம்	25,000
		87,500		87,500

'C' என்பவரை 1.1.2022 அன்று புதிய கூட்டாளியாக பின்வரும் கட்டுப்பாடுகளுடன் சேர்த்துக்கொண்டனர்

(அ) 'C' என்பவர், 1/5 எனும் இலாப பங்கு வீதத்தில் ரூ.10,000 மூலதனமாக அளித்தார்.

(ஆ) ரூ.20,000 -க்கு நற்பெயர் கணக்கு உருவாக்கப்பட்டது.

(இ) சரக்கிருப்பு மற்றும் அறைகலன் 10% குறைக்கப்பட்டது மற்றும் வராக்கடன் ஒதுக்கு 5%.

(ஈ) கட்டிடத்தின் மதிப்பு 20% உயர்த்தப்பட்டது.

(உ) புதிய விகிதத்தில் முதல் கணக்குகளை சரிசெய்து.

தேவையான பேரேடு மற்றும் இருப்பு நிலைக் குறிப்பு தயார் செய்க.

24. The balance sheet of P, Q and R who agree to dissolve is as follows.

Liabilities		Rs.	Assets	Rs.
Capitals :			Land and Buildings	5,500
	P	4,000	Stock	2,000
	Q	2,000	Debtors	1,000
	R	500	Cash in hand	1,500
Creditors		3,500		
		10,000		10,000

Profit sharing ratio 4:3:2. Assets realized Rs. 8,000. Creditors were paid in full. Realization expenses Rs. 2,000 prepare realization a/c. Capital a/c and Bank A/c.

P, Q மற்றும் R -ன் இருப்புநிலை குறிப்பு பின்வருமாறு அவர்கள் கலைப்பிற்கு ஒப்பக் கொண்டனர்.

பொறுப்புகள்	ரூ.	சொத்துக்கள்	ரூ.
மூலதனம் :		நிலம் மற்றும் கட்டிடம்	5,500
P	4,000	சரக்கிருப்பு	2,000
Q	2,000	கடனாளிகள்	1,000
R	500	கையில் ரொக்கம்	1,500
கடனீந்தோர்கள்	3,500		
	10,000		10,000

இலாப விகிதம் 4:3:2 சொத்துக்கள் விற்கப்பட்டு ரூ.8,000 க்கு திரட்டப்பட்டது. கடனீந்தோர் முழுமையாக தீர்க்கப்பட்டனர். கலைப்பிற்க்கான செலவு ரூ.2,000. பணமாக்கல் க/கு, முதல் க/கு மற்றும் வங்கி க/கு தயாரிக்க.